2026
யூன்

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

### இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் – கட்டடவாக்கம் 2026 யூனில் விரிவடைந்தது

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு - கட்டடவாக்கம்), மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு, கட்டடவாக்க நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலை எடுத்துக்காட்டி, 2026 யூனில் 60.0ஆக அதிகரித்தது.** முன்னைய மாதங்களில் வழங்கப்பட்ட கட்டடவாக்க கருத்திட்டங்களின் முன்னெடுக்கப்படுகின்ற நிறைவேற்றல்கள் இவ்வதிகரிப்பிற்கு காரணமாகவிருந்தன என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

முன்னைய மாதத்தில் பதிவாகிய உயர்வான மட்டத்திலான கருத்திட்ட வழங்கலைத் தொடர்ந்து, புதிய கட்டளைகள் சுட்டெண் மெதுவான வேகமாயினும், தொடர்ச்சியாக விரிவடைந்தது. நிறுவனங்கள் ஊழியர் ஆட்சேர்ப்பினை தொடர்ச்சியாக துரிதப்படுத்தியதால், தொழில்நிலைச் சுட்டெண் யூனில் மேலும் அதிகரித்தது. எனினும், தேர்ச்சிபெற்ற கட்டடவாக்க தொழிலாளர்களின் பற்றாக்குறை தொடர்ச்சியாக காணப்படுகின்றது என பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். கட்டடவாக்க நடவடிக்கைகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்புடன் கொள்வனவுகளின் அளவுச் சுட்டெண் அதிகரித்தது. எவ்வாறிருப்பினும், முக்கிய மூல, குறிப்பாக தார் போன்ற பொருட்களின் பற்றாக்குறையானது கட்டடவாக்க நடவடிக்கைகளின் வேகத்தினை தொடர்ச்சியாக தடைப்படுத்தியதாக பல பதிலிறுப்பாளர்கள் அறிக்கையிட்டனர். அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம், தற்போது இடம்பெற்றுவரும் வழங்கல் இடையூறுகளின் காரணமாக யூனில் உயர்வடைந்து காணப்பட்டது.

**கொ.மு.சுட்டெண் தொகுப்பு - கட்டடவாக்க அளவீடு**


| மாறி | 2026 மே | 2026 யூன் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **59.1** | **60.0** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 63.6 | 54.3 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 56.1 | 61.4 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 59.1 | 60.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 71.2 | 62.9 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்ளீட்டுப் பற்றாக்குறை இடர்நேர்வானது இத்துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் முட்டுக்கட்டைகளைத் தோற்றுவித்த போதிலும், ஆரோக்கியமான ஏற்கனவே திட்டமிடப்பட்ட பணிக் கருத்திட்டங்கள் மூலம் துணையளிக்கப்பட்டு, கட்டுமான நிறுவனங்கள் மத்தியில் எதிர்வரவிருக்கின்ற காலாண்டிற்கான வியாபார எண்ணப்பாங்கு சாதகமாகக் காணப்படுகின்றது.

**கொ.மு.சு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**60.0**
2026 யூன்

**கட்டடவாக்க கொ.மு.சு (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)**




**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு கட்டடவாக்கத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| பிரான்ஸ் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| ஜேர்மனி | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| அயர்லாந்து | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| இத்தாலி | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1] , 2026 யூலை 31 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com)*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**முறையியல்**
சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.
கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**
மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.